DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
C. C. No. 13/2014
Prosecution Witness PW 1
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ராமமூர்த்தி | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **-19.08.2024.**

எதிரி ஆஜர்**.**

முதல்விசாரணை**-**

நான் கடந்த 2006 ஆம் ஆண்டில் மின்சார வாரியத்தில் Superintendent Engineer ஆக பணிபுரிந்து தற்சமயம் பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 10.03.1997 முதல் 30.10.2001 வரை மதுரை மின்கோட்டத்தில் உள்ள அனுப்பானடி துணை மின்பிரிவில் உதவி செயற்பொறியாளராக வேலைபார்த்து வந்தேன். என் உபகோட்டத்திற்கு Anuppanadi Rural, Avaniyapuram, Chinthamani, Viraganoor, ஆகிய நான்கு பகுதிகள் என் ஆளுமையில் இருந்து வந்தது. கடந்த 17.05.2001 அன்று நானும், திரு. காளிதாஸ், உதவி செயற்பொறியாளர் மின் திருட்டு படை என்பவரின் குழுவினரும் அனுப்பானடி கிராம பகிர்மானத்தில் உள்ள அழகாரிபுரி மின்பகிர்மானத்தில் உள்ள 3/129 கதவிலக்கத்தில் உள்ள வெங்கடேஷ்வரா மாவுமில் மின் இணைப்பு எண். 429 Industrial Tariff III B ன்படி அந்த மின் இணைப்பின் உரிமையாளர் திரு. கனகு

அவர்களின் தகப்பனார் திரு. தனுஷ்கோடி அவர்களிடம் ஆய்வு செய்வதற்கான முன் அறிவிப்பு கொடுத்து ஆய்வு செய்தோம். அப்போது அந்த மீட்டர் பெட்டியின் கதவில் வைக்கப்பட்டிருக்கும் சீல் எண். D21874 சீலிங் வயரினுள் சீலில் உள்ள துவாரம் அடைக்கப்பட்டு சீலிங் வயர் சீலின் மேல் soldering செய்யப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே மேற்கொண்டு மீட்டரை ஆய்வு செய்ய திரு. மீனாட்சி சுந்தரம் , உதவி செயற்பொறியாளர் (MRT ) அவர்களுக்கு தகவல் கொடுத்து வரவழைத்தோம். அவர் மாலை சுமார் 06.00 மணியளவில் அந்தஇடத்திற்கு வந்தார். மீட்டர் பெட்டியிலுள்ள சீலினை அகற்றிவிட்டு மீட்டர் பெட்டியைத்திறந்து மீட்டரை அவர் ஆய்வு செய்தார். அந்த மீட்டர் simco தயாரிப்பு 3 phase 50 to 100 ams ஆகும். அதன் வரிசை எண்.0286493 ஆகும், Department No.MA04939H Reading 022207 ஆகும். அந்த மீட்டரின் மேல் பாகத்தில் 4 காதுகள் (hinges) இருக்கும். ஒவ்வொரு காதுகளிலும் MRT சீல் வைத்து அதன் led க்குள் சீலிங் வயரை அந்த துவாரங்களில் கோர்த்து MRT சீலிங் player வைத்து அழுத்தி சீலிங் வயர் வெளியே எடுக்கமுடியாத நிலையில் வைத்திருப்பார்கள். ஆனால், நானும், MRT AD திரு. மீனாட்சி சுந்தரம்

என்பவரும் பார்க்கும்போது அந்த சீலிங் வயரை அறுத்து பின்பு சீலிங் led ன்மேல் அந்த கட் செய்த சீலிங் வயரை வைத்து soldering செய்திருந்தார்கள். இதிலிருந்து அந்த சீலிங் வயரை கட் செய்து மீட்டரின் கவரை திறந்து மின் அளவை மாற்றியிருக்கிறார்கள். அந்த சீலிங் led ன் MRT No. D89072 left top ல் உள்ளது. MRT No.D89073 right top ல் உள்ளது. Left bottom ல் D89071 என்ற எண் உள்ளது. Right bottom ல் D89074 என்ற எண் உள்ளது. Terminal cover seal No.D21873 என உள்ளது. இதை ஆய்வு செய்து திரு. மீனாட்சி சுந்தரம் எனக்கு ஒரு அறிக்கை கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அறிக்கையானது திரு. மீனாட்சி சுந்தரம் AD கொடுத்த அறிக்கைதான் அது அ**.**சா**.**ஆ**. 1** ஆகும். அந்த அறிக்கையை வைத்து நான் அவனியாபுரம் காவல்நிலையத்தில் ஒரு புகாரளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரானது நான் கொடுத்ததுதான் அது அ**.**சா**.**ஆ**. 2** ஆகும். மேற்படி புகார் அளிக்கும் முன்பு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பீடு குறித்து கணக்கீட்டுத் தாள் தயார் செய்தோம். அந்த கணக்கீட்டுத் தாளில் அந்த இணைப்பில் இணைக்கப்பட்டிருந்த மின்பழுவானது 39.538 kilo wats ஆகும். அது 53 HP அளவிற்கு

இணையானதாகும். பின்பு, அந்த மாவு மில் இயங்கும் நேரத்தை விசாரித்தபோது அது 8 மணிநேரம் இயங்கும் என தெரியவந்தது. அவர்கள் மொத்தமாகவே 306 நாட்கள் மின்சாரத்தை பயன்படுத்தியுள்ளார்கள். அதை கணக்கீடு செய்யும்போது 0.8 load factor x 8 hours x 306 days = Total 77431.22 Units என கணக்கிடப்பட்டது. மீட்டரில் பதிவான யூனிட்டுகள் 22197 ஆகும். மேற்படி 22197 யூனிட்டுகளுக்கு பயனீட்டாளர்கள் பணம் செலுத்திவிட்டார்கள். எனவே, Units 77431.22 – 22197 = 55234.22 யூனிட்டுகள் திருடப்பட்டதாக தெரியவந்தது. மேற்படி திருடப்பட்ட (55234.22) யூனிட்டுகளை 3 மடங்கு பெருக்கி அப்போதுள்ள Tariff விகிதம் ரூ.4.25/-ன்படி சுமார் ரூ.7,04,236.03/- என கணக்கிடப்பட்டது. அத்துடன் மின்சார வரி 5% ரூ.11,737.27/- தொகையையும் சேர்த்து மொத்த இழப்பாக ரூ. 7,15,973.57/- என கணக்கிடப்பட்டு அது ரூ.7,17,974/- ஆக round off செய்யப்பட்டது. மேற்சொன்ன தொகையை நான் அவனியாபுரம் காவல்நிலையத்தில் அளித்த புகாரில் தெரிவித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் calculation sheet நான் தயார் செய்தது அது அ**.**சா**.**ஆ**. 3.** ஆகும். அந்த calculation sheet -யும்

அவனியாபுரம் காவல்நிலையத்தில் புகாருடன் சேர்த்து ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக அவனியாபுரம் காவல் ஆய்வாளர் என்னை 18.05.2001 அன்று விசாரித்தார்.

குறுக்குவிசாரணை ( எதிரி தரப்பில்)

சம்பவ காலத்தில் எங்களுடைய அலுவலகமானது அனுப்பானடியில் இருந்து வந்ததென்றால் சரிதான். திருநெல்வேலி உதவி செயற்பொறியாளர் திரு. காளிதாஸ் என்பவர் அழைத்ததன்பேரில்தான் நான் சம்பவ நாளில் சோதனைக்குச் சென்றேன் என்றால்சரிதான். மின் தடுப்பு பிரிவில் தனியாக ஆட்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அது தனியான பிரிவு ஆகும். அந்த பிரிவில் நான் அங்கம் வகிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று குறிப்பிட்டு இடத்தில் ஆய்வு செய்வதற்கு அழைக்கப்பட்டேனா அல்லது பொதுவான ஆய்வு செய்ய அழைக்கப்பட்டேனா என்றால் குறிப்பிட்ட ஆய்வு செய்வதற்காக அழைக்கப்பட்டேன். திரு. காளிதாஸ் தலைமையிலான குழுவினர் எங்கள் அலுவலகத்திற்கு வந்து என்னை அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அவர்கள் எனது அலுவலகத்தில் வந்து

என்னிடம் வாய்மொழியாக எனது ஆளுமைக்கு உட்பட்ட பகுதியில் சோதனை செய்யவேண்டியிருந்ததால் என்னை அழைத்தார்கள் என்றால் சரிதான். மின் திருட்டு சம்பந்தமாக சோதனை செய்வதற்கு விதிகள் உள்ளதென்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால். திரு.மீனாட்சி சுந்தரத்தை நான் ஆய்விற்காக அழைத்தமைக்கு காரணம் மீட்டரை பொறுத்தவரை ஆய்வு செய்வதற்கு அவர்தான் அதிகாரம் படைத்தவர் என்பதால் அவரை ஆய்விற்கு அழைத்தேன். அவர் அந்த சமயத்தில் Electrical inspector ஆக பணியில் இல்லை என்றால் சரிதான். முதன்முதலில் என்னை அலுவலகத்தில் வைத்து மின்சார தடுப்பு பிரிவினர் ஆய்விற்கு அழைத்தபோது நானோ, மின்சார பிரிவினரோ பசுமலையில் உள்ள மீனாட்சி சுந்தரத்தை ஆய்வுக்கு அழைத்தோமா என்றால் இல்லை. ஒரு இடத்தில் சென்று ஆய்வு செய்யவேண்டுமென்றால் அந்த இடத்தின் உரிமையாளரிடமோ அல்லது பொறுப்பாளரிடமோ ஆய்விற்கான அனுமதி கடிதம் கொடுக்கவேண்டுமென்றால் சரிதான். அவ்வாறு ஆய்விற்கான அனுமதி கடிதம் கொடுத்த பின்பு என்ன ஆய்வு செய்தோம் என்ற ஆய்வறிக்கை தயாரிப்போம் என்றால் சரிதான். அந்த ஆய்வறிக்கையில் உரிமையாளரிடமோ, பொறுப்பாளரிடமோ கையெழுத்து பெறவேண்டுமா

என்றால் தேவையில்லை. நான் என்ன ஆய்வு செய்தேன் என்பது குறித்து ஆய்வறிக்கை உரிமையாளரிடமோ, பொறுப்பாளரிடமோ நகல் ஒன்றை கொடுக்கவேண்டுமென்றால் நான் அவ்வாறு செய்யவில்லை. அந்த ஆய்வறிக்கையில் நான் என்னென்ன சோதனைகளை எப்போது மேற்கொண்டு, அதில் என்னென் கண்டுகொண்டேன் என்பதுகுறித்த விபரங்கள் இருக்குமென்றால் சரிதான். ஆய்வறிக்கை செய்தபின்பு, அந்த இடத்தில் வைத்து பார்வை மகசர் தயார்செய்யப்படவேண்டுமென்றால்சரிதான். அந்த பார்வை மகசரில் நான் ஆய்வு செய்வதற்கு முன்பும், பின்பும் தடயப் பொருட்கள் எவ்வாறிருந்தது என்பது பற்றி குறிக்கப்படவேண்டும் என்றால் சரிதான். அந்த பார்வை மகசரில் ஆய்வானது எந்த தேதியில் யார் மூலம் எப்போது செய்யப்பட்டது என்று குறிக்கப்படவேண்டும் என்றால் சரிதான். அதில் ஒரு நகலானது உரிமையாளரிடமோ, பொறுப்பாளரிடமோ கொடுத்து கையொப்பம் பெறப்படவேண்டும் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் வரையப்பட்ட பார்வை மகசரில் உரிமையாளரிடமோ, பொறுப்பாளரிடமோ கையெழுத்து எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் முதன்முதலில் ஆய்வு

செய்ய அனுமதி கடிதமானது என்னால் தயாரிக்கப்பட்டதென்றால் சரிதான். பின்னர், மாலையில் செய்யப்பட்ட ஆய்விற்கு அனுமதி கடிதமானது உரிமையாளரிடமோ, பொறுப்பாளரிடமோ கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மறு ஆய்வு செய்யவதற்கான அனுமதி கடிதம் தயாரிக்கப்பட்டதா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்பந்தமாக சம்பவ தினத்தன்று சம்பவ இடம் செல்வதற்கான கடிதம் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் கடிதம் கொடுக்கமாட்டார்கள். நான் கொடுத்த புகாரில் ( அ.சா.ஆ.2) கடித எண் என்று குறிக்கப்பட்டுள்ளது என்னவென கேட்டால் அது புகார் கொடுக்கப்பட்டமைக்கான கடித எண்ணை தான் அவ்வாறு குறித்துள்ளேன். அ.சா.2 புகாரானது 17.05.2001 அன்று அவனியாபுரம் காவல்நிலையத்தில் மாலை சுமார் 07.00 மணியிலிருந்து 08.00 மணிக்குள்ளாக கொடுத்திருப்போம். அன்றைய தினமே போலீசார் சம்பவ இடத்தை ஆய்வு செய்து மீட்டர் கைப்பற்றப்பட்டதென்றால் சரிதான். அவ்வாறு மீட்டர் கைப்பற்றப்படும்போது நான் மீட்டரை எடுத்துஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவ இடமான மாவு மில்லாது நெருக்கமான குடியிருப்பு பகுதிகள் நிறைந்த பகுதிகள் என்றால்

சரிதான். ஆனால் அது industrial area இல்லை என்றால் சரியல்ல. சம்பவ பகுதியானது தொழிற்சாலைக்கான ஒதுக்கப்பட்ட area இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தபோதோ, அல்லது எனது புகாருடனோ இந்த வழக்கில் நான் முதன் முதலாக தயாரித்த சோதனை அறிவிப்பு கடிதத்தை நான் கொடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் கொடுத்த புகாரிலும் சோதனை அறிவிப்பு கடிதம் கொடுத்ததாக இணைப்பில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. மேற்படி கடிதத்தை பார்த்தால்தான் நான் என்றைய தினம், யார் முன்னிலையில், யார் யாருடன் சேர்ந்து சோதனை மேற்கொண்டேன் என்பது தெரியவரும் என்றால் அதில் அனைவரின் பெயரும் வராது. நான் சோதனை செய்த இடமும், தேதியும், நேரமும் வரும். நான் தயார் செய்த பார்வை மகசரையும் புகாருடனோ அல்லது ஆய்வாளர் விசாரணையில் தரவில்லைஎன்றால் சரிதான். அந்த பார்வை மகசரில் என்றைய தினம் யார் முன்னிலையில் என்ன ஆய்வு செய்யப்பட்டது என குறிக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அ.சா.ஆ 1 ஆன ஆய்வறிக்கையில் நான் மேற்படி கடிதத்தை பெற்றுக்கொண்டமைக்கான

ஒப்புகை எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். அ.சா. ஆ.1 ஆன ஆய்வறிக்கை சம்பவ தினத்தன்று மாலை 06.30 மணியளவில் தயார் செய்யப்பட்டதென்றால் சரிதான். திரு. மீனாட்சி சுந்தரம் ஆய்வு செய்வதற்கு முன்பாக மீட்டர் பெட்டியின் வெளிப்பாகமானது சீல் உடைக்கப்பட்டு உள்ளேயுள்ள மீட்டர் பார்க்கப்பட்டதென்றால் சரிதான். மீட்டரின் வெளிப்புற பெட்டியானது சீல் உடைக்கப்பட்டு மீட்டர் என்னால் ஆய்வு செய்யப்பட்டதற்கு தனியாக எந்த ஆய்வறிக்கையும் என்னால் தயாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். மின் இழப்பீடு கணக்கீடு செய்வதற்கு இதுவரை பயனீட்டாளர் எவ்வளவு பணம் கட்டியுள்ளார் என கணக்கீடு செய்யப்பட்டு பாக்கி தொகை எழுதப்படும் என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவ இடத்திற்கான மின் அட்டையும், பணம் கட்டிய மின் இரசீதும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மின் அட்டை, மின் கட்டிய இரசீது ஆகியவை மின் பகிர்மான அலுவலகத்தில் இருக்குமென்றால் சரிதான். மேற்படி அலுவலகமானது எங்கள் அலுவலக வளாகத்திற்குள்தான் உள்ளது. அந்த அலுவலகத்திற்கு வந்து இவ்வழக்கின் பயனீட்டாளர் எவ்வளவு பணம் இந்த மீட்டரை பயன்படுத்திய வகையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து

கொள்ளவில்லை. இன்றைய தேதி வரை பயனீட்டாளர் இவ்வழக்கு சம்பந்தமாக மின் பயனீட்டு கட்டணம் எவ்வளவு செலுத்தியுள்ளார் என நான் எந்த ஒருஆவணமும் பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 3-ல் அபராதத் தொகை என்று எதுவும் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்படவில்லை. 3 மடங்கு கணக்கீடு என்பது 8 x 3 = 24 மணி நேரம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறில்லை. 3 மடங்கு கணக்கீடு எதனால் செய்யப்பட்டது என்ற விளக்கம் எதுவும் அ.சா.ஆ. 3 ல் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் விசாரிக்கும்போது இந்த கணக்கு சம்பந்தமான விதிகள் எதையும் என்னிடம் வாங்கிப் பார்த்தாரா என்றால் இல்லை. மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்ணுக்கும் department எண்ணுக்கும் தனியாக ரெஜிஸ்தர் நம்பர் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி ரெஜிதரை பார்த்தால் எந்த பகுதிக்கு மின் இணைப்புக்கு மீட்டர் கொடுக்கப்பட்டுள்ளது என்று பார்க்கமுடியுமா என்றால் தெரியாது. மேற்படி ரெஜிஸ்தர் பசுமலையில் உள்ள MRT ல் இருக்கும் என்றால் சரிதான். அவர்களுக்குதான் அந்தமீட்டர் எப்போதுசோதனை செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். அந்த

மீட்டரை சோதனை செய்வதற்கு MRT ல் உள்ள ஆய்வாளருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். புகாரைத் தவிர சம்பவ நேரத்தில் நான் ஆய்வு செய்வதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, காவல்துறையில் கொடுக்கவில்லை. நான் சொன்னதுபோல் சொன்ன விதத்தில் சம்பவ இடத்தில் எந்த ஆய்வும் செய்யப்படவில்லை என்றாலும் அதனடிப்படையில் ஆவணங்கள் எதுவும் தயார் செய்யப்படவில்லையென்றாலும் நிர்வாக கணக்கெடுப்பிற்காக எங்கள் உயர் அதிகாரிகள் சொன்னதன்பேரில் என்னை சாட்சியாக போட்டு பின்னர் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - ராமமூர்த்தி.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.